

சென்னை கிழக்கு மாவட்டம் வில்லிவாக்கம் தொகுதி பகுதி வட்டம் மறுசீரமைப்பு தொடர்பான நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் பி கே சேகர்பாபு பகுதி வட்டம் மறு சீரமைப்பு பற்றி எடுத்துக் கூறி ஆலோசனைகள் வழங்கினார். இக்கூட்டத்தில் பகுதி செயலாளர்கள் வே வாசு,கூ.பீ.ஜெயின், டிவி செம்மொழி சாவித்திரி வீரராகவன் சுதா தீனதயாளன், வானவில் விஜய் ,எல் பி எஃப் ஆர் வரதன் ,ஜிஜே பிரபு ,லதா வாசு, எம். சுரேஷ் எ.வேதா மற்றும் கழக நிர்வாகிகள் செயல்வீரர்கள் முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### அம்பாசமுத்திரம் திருமண மண்டப உரிமையாளர் வெட்டிக் கொலை!

# மக்களை உயிர் பயத்துடன் வாழும் நிலைக்கு முதல்வர் விஜய் தள்ளியுள்ளார்!

## கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கண்டனம்!

*சென்னை, செப்.11*

அம்பாசமுத்திரம் திருமண மண்டப உரிமையாளர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார். மக்களை உயிர் பயத்துடன் வாழும் நிலைக்கு முதலமைச்சர் விஜய் தள்ளியுள்ளார் என்று கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கண்டனம் தெரிவித்துள்ளார்.



இது குறித்து கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கண்டனம் வருமாறு:-

அம்பாசமுத்திரத்தில் திருமண மண்டப உரிமையாளர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ள மற்றுமொரு அதிர்ச்சிச் செய்தி வந்திருக்கிறது.

முந்தைய ஆட்சியில் சட்டம்ஒழுங்கு சரியில்லை என்று மக்களிடம் வாக்கு கேட்டு ஆட்சிக்கு வந்துவிட்டு, இன்று மக்களை உயிர் பயத்துடன் வாழும் நிலைக்குத் தள்ளியிருக்கிறார் முதலமைச்சர் ச. ஜோசப் விஜய் அவர்கள்.

முதலமைச்சருக்கு காவல் துறையை கையாளத் திறனில்லை என்றால், அதைத் திறம்பட கையாளக்கூடிய வேறு யாரிடமாவது ஒப்படைத்துவிட்டுப் போகட்டும். மக்களின் உயிருடன் விளையாட வேண்டாம்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. கண்டனம் தெரிவித்துள்ளார்.

---

### களக்காடி எல்லப்பன் தலைமை! எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலை

# ஜாபர்கான்பேட்டையில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா!

## திருவுருவச் சிலைக்கு மா.சுப்பிரமணியன் மாலை அணிவித்து மரியாதை

*சென்னை, செப்.11,*

சைதாப்பேட்டை, 139 வது வட்டம், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு ஜாபர்கான் பேட்டை கெங்கையம்மன் கோவில் அருகில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்கள் திருவுருவசு சிலைக்கு 15.9.2026 செவ்வாய்க்கிழமை அன்று காலை 7 மணியளவில் தலைமை பொதுக்குழு உறுப்பினர் களக்காடி எல்லப்பன் தலைமையில் பகுதிச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி, அட்கோ கமலநாதன், சை.மு. சேகர் ஆகியோர் முன்னிலையில் முன்னாள் அமைச்சர் மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்.

இதில் மு.மகோஷ்குமார், எஸ்.குணசேகரன், மா.அன்பரசன், எம்.ஸ்ரீதரன், மின்னல் கந்தப்பன், எம்.எஸ்.ஹரிபாபு, டி.என்.சிவமணி, சைதை த. சம்பத், வி.பி.ஜானகிராமன், ஆர்.ரமேஷ், கவிதா கௌதமன், சைதைசாதிக், ந.தமிழரசு, எஸ்.பி.தோதண்டம், எம். நாகா, நா.மணிகண்டன், ஆர். கிருஷ்ணகுமார், நரேஷ்குமார், ஜி.கே. ராமச்சந்திரன், வீ.மதிவாணன், த.மணி, மு.கதிரவன், பொ.பரத்குமார், பி.எஸ். முருகன், அ.அயாத்பாஷா, சாந்தி சுந்தரம், இ.வரதன், மா.ஏழுமலை, பி.எஸ்.பிரகாஷ், பூபதி வெங்கடேசன், சுமதி தீனதயாளன், எல்.சந்திரன், சி.டி.காசிநாதன், து.முரளி, வி.சபரி, அ. சுப்பிரமணி, து.கொடிசுரேஷ், டி.கோபாலகிருஷ்ணன், எஸ். முகமது அலி, இ.ஏழுமலை, யமஹாராஜேஷ், ஜிம்.பிரபு, ம.தீலிப்பன், க.ரஞ்சித், மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர். பாபு எல்லப்பன் நன்றி கூறுகிறார். தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் களக்காடி எல்லப்பன் நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை செய்துள்ளார்.

---

### பொய் வாக்குறுதிகளை நிறைவேற்றாமல், வீடியோ ரீல்ஸ் மூலம் ஆட்சி நடத்தும்

# முதலமைச்சரை விரைவில் வீட்டுக்கு அனுப்புவார்கள் மக்கள்!

## மாவட்ட செயலாளர் ஆவடி சா.மு.நாசர் சிறப்புரை!

திருவள்ளூர் செப் 11;

திருவள்ளூர் மத்திய மாவட்டம், பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றிய திமுக நிர்வாகிகளுக்கான மறுசீரமைப்பு கலந்தாய்வுக் கூட்டம், ஒன்றியக் கழகச் செயலாளர் ப.ச.கமலேஷ் ஏற்பாட்டில் சென்னீர்குப்பத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர் பங்கேற்று, கழகக் கிளைகளின் மறுசீரமைப்பு பணிகள் குறித்து நிர்வாகிகளுக்கு விரிவான ஆலோசனைகளை வழங்கினார். தொடர்ந்து, நிர்வாக மறுசீரமைப்புக்கான படிவங்களை நிர்வாகிகளிடம் வழங்கி, பணிகளை விரைந்து நிறைவு செய்யுமாறு அறிவுறுத்தினார்.

கூட்டத்தில் பேசிய ஆவடி சா.மு.நாசர், ஆட்சியின் தோல்விகளை மறைப்பதற்காக தரம் தாழ்ந்த விமர்சனங்களையும், கொச்சையான பேச்சுகளையும் முன்வைப்பதை மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று தெரிவித்தார்.

நடிகர் விஜயின் தரம் தாழ்ந்த பேச்சைக் கண்டித்து திருவள்ளூரில் நடைபெறவுள்ள மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியத்தின் சார்பில் கழக நிர்வாகிகளும், தொண்டர்களும் பெருந்திரளாக பங்கேற்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து தமிழக அரசை விமர்சித்த அவர், தேர்தலுக்கு முன்பு மக்களிடம் ஏராளமான வாக்குறுதிகளை அள்ளி வீசி, ஆட்சிக்கு வந்த பின்னர் அவற்றை நிறைவேற்றாமல் கிடப்பில் போட்டுள்ளதாக குற்றம்சாட்டினார்.

“மக்களை ஏமாற்றி, விளம்பரங்களாலும் ரீல்ஸ்களாலும் ஆட்சிக்கு வந்துவிடலாம்; ஆனால் மக்களின் வாழ்க்கையை ஏமாற்ற முடியாது. மக்கள் அனைத்தையும் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். உரிய நேரத்தில் தங்களது தீர்ப்பை வழங்குவார்கள்” என்ற கருத்தை வலியுறுத்திய அவர், பொதுமக்களின் நலனில் அக்கறையின்றி செயல்படும் இந்த ஆட்சிக்கு மக்கள் விரைவில் முடிவு கட்டுவார்கள் என தெரிவித்தார்.

திமுக நிர்வாகிகள் அனைவரும் தற்போது நடைபெற்று வரும் நிர்வாக மறுசீரமைப்புப் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும். ஒவ்வொரு கழகக் கிளையையும் வலுப்படுத்தி, புதிய நிர்வாகிகளை உருவாக்கி, அடிப்படைக் கட்டமைப்பை மேலும் உறுதிப்படுத்த வேண்டும்.

கழகத்தின் கொள்கைகளையும், திமுக அரசின் சாதனைகளையும் மக்களிடம் தொடர்ந்து எடுத்துச் செல்ல வேண்டும். மக்கள் பிரச்சினைகளில் முன்னின்று குரல் கொடுத்து, மக்களோடு மக்களாக நின்று பணியாற்ற வேண்டும். வலுவான கழகக் கட்டமைப்புடன் களப்பணியாற்றி, மீண்டும் திமுகவை ஆட்சியில் அமரச் செய்ய அனைவரும் முழு ஈடுபாட்டுடன் செயல்பட வேண்டும் என ஆவடி சா.மு.நாசர் கேட்டுக் கொண்டார்.

---

### மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் தலைமை! காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் சார்பில்

# சட்டமன்றத்தில் முதல்வர் விஜய் ஆணவப் பேச்சு: செங்கல்பட்டில் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் அறிக்கை!

*சென்னை,செப்.11-*

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சட்டமன்றத்தில் முதல்வர் விஜயின் அடாவடி - ஆணவப் பேச்சைக் கண்டித்து செங்கல்பட்டில் கண்டன ஆர்ப்பாட்டம் நாளை (12.9.2026) காலை 10 மணி அளவில் செங்கல்பட்டு பழைய பேருந்து நிலையம் அருகில் மாவட்ட கழக செயலாளர் தா.மோ. அன்பரசன் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

ஆகவே மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள், மாநகர அமைப்பாளர் , துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வார்டு, கிளை, அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தவறாமல் கலந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

---

### தியாகராயர் நகர் கிழக்குப் பகுதி

# 131வது வட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

## வட்டச் செயலாளர் மு.ம.செந்தில்குமார் அறிக்கை!

*சென்னை, செப்.11-*

சென்னை தென்மேற்கு மாவட்டம் தியாகராயர் நகர் கிழக்குப் பகுதி 131வது வட்ட தி.மு.க. ஆலோசனைக் கூட்டம் இன்று (11.10.2026 வெள்ளிக்கிழமை ) மாலை 6 மணிக்கு வட்ட அவை தலைவர் வி.டி. செல்வம் தலைமையில் வட்ட கழக அலுவலகம் கலைஞர் பொதுநல மன்றத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் தியாகராயர் நகர் கிழக்குப் பகுதி செயலாளர் கோ.சு.மணி, மேற்குப் பகுதி கழக செயலாளர் கே. ஏழுமலை எம்.சி., பகுதி அவைத் தலைவர் மு.மணிவண்ணன், 131வது வார்டு மாமன்ற உறுப்பினர் கோமதி மணிவண்ணன் எம்.சி. ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்குகிறார்கள்.

ஆகையால் மாவட்ட கழக, பகுதி கழக, வட்ட கழக நிர்வாகிகள், பாகப் பொறுப்பாளர்கள், மகளிர் அணி மற்றும் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோது கண்டன ஆர்ப்பாட்டம், கழக முப்பெரும் விழா மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசிக்கப் படுகிறது என்று வட்டச் செயலாளர் மு.ம.செந்தில்குமார் தெரிவித்துள்ளார்.

---

# நம் தலைவரின் வரலாறு காக்கைகள் கரைவதால் மறையாது!

# ஆணவம் பிடித்த விஜய்யின் கூட்டம் விரைவில் வீழ்வது உறுதி!

ஒன்றியங்களை, பேரூர், பஞ்சாயத்துக் கிளைகளை இழக்காமல் பிரிக்க வேண்டும். அடுத்த 10 நாளில் பட்டியல் வேண்டும் என்கிற பணி கழகத் தலைவரின் அறிவிப்பின்படி தற்போது தீவிரமாக, பரபரப்போடு நடைபெற்று வருகிறது.

தலைவர் தளபதி உறுதி அளித்திருக்கிறார். யாரையும் விடமாட்டோம்.

ஒரு வீட்டில் மரிக்கொழுந்தும் வேண்டும். மல்லிகையும் வேண்டும். மனோரஞ்சிதமும் வேண்டும்.

கொழுந்திலே வாசம் வீசுவது மரிக்கொழுந்து. மொட்டிலேயே வாசம் தருவது மல்லிகை. காய்ந்தும் மணம் தருவது மனோரஞ்சிதம். அதுபோல இளைஞர்களும் வேண்டும். எங்களைப் போல. நடுத்தர வயதினரும் வேண்டும். 70 வயதுக்கு மேலே உள்ள அனுபவம் வாய்ந்தவர்களும் வேண்டும். அவர்களின் வழிகாட்டுதல்தான் கட்சியை உயர்த்தும்.

யாரையும் தலைமை விட்டு விடாது. தனக்குத் திருமணம். பொன்விழா, மணிவிழா, வைரவிழா, பவள விழா என எடுக்கும்போது தம்பி தங்கைகளுக்கும் திருமணம் செய்து பார்க்க ஆசைப்படுவது போலத்தான் இளைஞர்களுக்கு முடிசூட்டு விழா. கழகத்தலைவர் எடுக்கும் முடிவுக்குக் கட்டுப்படுவோம்.

இது இளைஞர்களிடமே ஒப்படைப்போம் என்பது அல்ல. இளைஞர்களுக்கும் வாய்ப்பு அதிகமாகக் கொடுப்போம்.

தமிழ்நாட்டை மாற்ற வந்த உடைமாற்றி விஜய்யின் அட்ராசிட்டிக்கு அளவில்லை. மாபெரும் தலைவர்கள் அறிஞர்கள் அமர்ந்த இடம் இப்போது அசிங்கப்படுகிறது.

கிராமத்தில் செட்டி கெட்டால் பட்டுவேட்டி என்பார்கள். விஜய் எதில் கெட்டார்?. வெள்ளிக்கிழமைகளில் தொடர்ந்து பட்டுவேட்டி கட்டுகிறார்.

ஜார்ஜ் கோட்டையா, விஜயின் கோட்டையா என்கிற அளவு கோட் உடை.

இதெல்லாம் உங்கள் ஜோசியரின் சேட்டையா என்று கேட்கிற அளவுக்கு!

மகாத்மா காந்தி பார்-அட்-லா மேல் நாட்டில் படித்தாலும், மேலாடை இல்லாமல் இந்தியாவில் உலாவியவர்.

தந்தை பெரியார் ரயிலிலே பயணம் செய்திட மூன்றாம் வகுப்பில் ஏறியதைப் பார்த்த ஒருவர். ஓடோடி சென்று முதல் வகுப்புக் குளிர்சாதன டிக்கெட் எடுத்து வந்து கொடுத்தார்.

கொடுத்தவரிடம் மறுப்பேதும் கூறாது. போய் வாருங்கள் என அவரை வழி அனுப்பிவிட்டு, அவர் சென்றபின் அந்தச் சீட்டை மீண்டும் கவுண்டரில் சென்று ரத்து செய்துவிட்டு வரச்சொல்லி, அந்தப் பணத்தை திருச்சி பெரியார் கல்லூரிக்கு அனுப்பி வைத்த எளிமையைத் தந்தை பெரியார் சாகும்வரை அப்படியே வாழ்ந்து காட்டியவர்.

கலைஞர். திரைப்படத்தில் கதை வசனம் எழுதினார். 1955-விலேயே சொந்தக் கார். சொந்த வீடு உண்டு. ஆனால் அதே குறுகிய வீட்டில்தான் எளிமையாக வாழ்ந்தார்.

இப்படி எளிமையாக தலைவர்கள் வாழ்ந்த தமிழ் நாட்டில், அநியாயத்துக்கு ஆடம்பரமாக விஜய் வாழ்கிறார். 300 ரூபாய்க்குத் தூவ வேண்டிய பூக்களை, 6 கோடி ரூபாய் செலவு செய்து மேட்டூர் அணையில் தண்ணீரைத் திறக்கிறார். தண்ணீரைத் திறக்கச் சொன்னால், காசைத் தண்ணீராய் இரைக்கிறார். தாமதமாகத் திறக்கப்படும் நதிநீருக்கே இந்த ஆடம்பரம்.

துப்புரவு தொழிலாளர்களின் கோரிக்கைகளை ஏற்க வேண்டும். முடியாவிட்டால் இயலாமையை ஒப்புக்கொள்ள வேண்டும். அதை விடுத்து தி.மு.க. வழித்து எடுத்துச் சென்றுவிட்டது என எப்படி த.வெ.க.வினர் கூறலாம்?

நிதி இல்லாத சூழலில் 1,200 கோடிக்கு புது சட்டசபைக் கட்டிடம் எதற்கு? 843 உறுப்பினர்கள் கொண்ட புதிய நாடாளுமன்றத்திற்கு 800 கோடிகள்தான் செலவு. ஆனால் 234 பேர் அமரும் சட்டமன்றத்துக்கு சட்டமன்றம் அமைய 1,200 கோடியா செலவு?

ஒவ்வொரு முறையும் விஜய் விமான பயணத்திற்குச் செல்ல தனி விமானத்திற்கு கோடிக்கணக்கில் செலவு ஏன்?

அண்ணா, எம்.ஜி.ஆர்., என்.டி.ஆர். இப்படித்தான் ஊதாரித்தனமாக அரசுப் பணத்தை செலவு செய்தார்களா?

எம்.எல்.ஏக்களுக்கு பல கோடியில் எதற்குக் கார்? டிரைவர் சம்பளம். பெட்ரோல் அலவன்ஸ் தேவையா? இந்தியாவில் எங்காவது உண்டா? இந்திய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உண்டா?

மழை அளவோடு பெய்தால் மழை, அதிகமாக பெய்தால் பிழை.


செலவு செய்ய வேண்டும். அதற்கும் ஓர் அளவு வேண்டாமா? அடுத்தவர்களைக் குறை கூறுவதையே வாழ்க்கையாக இல்லாமல் ஆட்சியை நடத்த வேண்டும்.

கழகத்தலைவர் தளபதி. எடப்பாடி ஆட்சியில் கொரோனா நேரத்தில் தலா 5000 ரூபாய் ரேஷன் கார்டுக்கு கொடுக்கும்படி கேட்டார். ஆனால் எடப்பாடி 1,000 ரூபாய் மட்டுமே தந்தார். பின்னர் தளபதி ஆட்சிக்கு வந்தவுடன் கொரானா நிவாரணமாக ரேஷன் கார்டு ஒன்றுக்கு தலா 4.000 ரூபாய் வழங்கினாரே தவிர மற்றவர்களைக் குறை கூறிக் கொண்டிருக்கவில்லை.



நடிகராக இருந்த மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்.. முத்தமிழறிஞர் மு. கருணாநிதி, ஜெயலலிதா அனைவரும் இருந்த அறையினை மாற்றி அதற்கு 5 கோடி செலவு செய்யும் விஜயினை நாடு தாங்காது.

ஒரு புத்திசாலி தலைவன் இருக்கும் கூட்டத்தில் பத்து முட்டாள் இருந்தாலும் வெற்றி பெறலாம். ஒரு முட்டாள் தலைவன் இருந்து சுற்றியுள்ள அமைச்சர்கள் புத்திசாலியாக இருந்தாலும் ஜெயிக்கும். தலைவனும் முட்டாள் அமைச்சர்களும் முட்டாள் என்றால் வெல்லாது. வென்றாலும் அந்தக் கூட்டம் நீண்ட நாள் நீடிக்காது என்பது பழமொழி அந்த மூன்றாவது கூட்டம்தான் இந்த விஜய் கூட்டம். அதனால்தான் சொல்கிறேன் வீழ்வது விஜய் ஆட்டம். வெல்லப்போவது தளபதியின் கூட்டம் என்று.



கவிஞர்
**காசிமுத்து மாணிக்கம்**
(கழக வர்த்தகர் அணிச் செயலாளர்)

இங்கே ஆண்டிபட்டியில் பேசிய எம்.எல்.ஏ. மகாராசன், மூன்று முறை வென்று சட்டமன்றம் சென்று கொண்டிருப்பவர். சட்டமன்றம் போகவே வெட்கமாக இருக்கிறது என்று பேசினார். கம்பம் செல்வேந்திரன் தி.மு.க. பழைய வரலாறுகளைச் சுட்டிக்காட்டி ஆளும் கட்சியை வெட்கப்பட வைத்திருக்க வேண்டும் என்றார்.

நீங்கள் நினைப்பது போல் சபாநாயகர் J.C.D. பிரபாகர் நியாயமானவர் அல்ல. பசுத்தோல் போர்த்திய புலி. மற்றவர்கள் பேசினால் நியாயத் தராசினை பிடிக்கும் சபாநாயகர், முதல்வர் பேசும்போதெல்லாம் குஞ்சினைக் காப்பாற்றும் பறவையைப் போல் போர்த்திப் பாதுகாக்கின்றார்.

J.C.D. பிரபாகர் நடிப்பால், நம் தரப்பிலிருந்து பல விஷயங்கள் வெளிப்படுத்த முடியாமல் போகிறது.

வளர்ந்து கெட்டவன். “மதுவைக் கொண்டு வந்ததே தி.மு.க.தான்” என்கிறார். நம்மவர். ‘தி.மு.க.தான் கொண்டு வந்தது. தி.மு.க.வே மதுவை மூடியது” என்று முற்றுப்புள்ளி வைக்கிறார்.

“கள்” மது வகை இல்லை என்றால் திறக்கலாமே. “கள்” மது என்பது உண்மைதானே, அதனால்தானே கள்ளினைத் திறந்துவிடாது இருக்கிறோம். அந்தக் கள் காங்கிரஸ் ஆட்சியில் கரை புரண்டு ஓடியது. அப்படி ஆனால் காங்கிரஸ்தானே முதலில் மதுவைக் கொண்டு வந்தது?

அதன்பின் எம்.ஜி.ஆர். இருந்த தி.மு.க. 1971-ல் கள்ளச்சாராயத்தைத் தடுக்க, சுற்றிலும் நெருப்பு நடுவில், கற்பூரமாக இருக்க வேண்டாம் என முடிவு எடுத்து, எம்.ஜி.ஆர். இருந்த தி.மு.க சாராயத்தைக் கொண்டு வந்தது.

ஆனால் எம்.ஜி.ஆர். இல்லாத திமுக 1974-ல் சாராயத்தை மூடியது.

அதன் பின் 1980-ல் சாராயம், பின் உயர் ரக மதுபானம் வந்தது எம்.ஜி.ஆர். ஆட்சியில், டாஸ்மாக் (TASMAC) கொண்டு வந்ததே எம்.ஜி.ஆர். தான்.

அரசு நடத்த வேண்டிய கல்விச் சாலைகளைத் தனியாரும், தனியார் நடத்த வேண்டிய சாராயக்கடைகளை அரசாங்கமும் நடத்துவது என்கிற கொள்கையை அமல்படுத்தியது ஜெயலலிதாவின் அ.தி.மு.க. அரசு.

பாவம் ஒரு இடம். பழி ஒரு இடம் எனக் குறுக்குவழி கண்ட இயக்கம் எப்போதும் நம்மீது கறையைத் தெளிக்கிறது. அதை நாம் எடுத்துச் சொல்ல வேண்டும்.

காலம் ஒரு நாள் மாறும், நம் கவலைகள் யாவும் தீரும். அப்போது அசாமில் ஆரம்பிக்கப்பட்ட அசாம் கனபரிஷத் கட்சியும், அதன் முதல்வர் மெஹந்தாவும் இன்று காணாமல் போனது மாதிரி, த.வெ.க.வினரும் காணாமல் போய்விடுவார்கள்.

காக்கைகள் கரையும் மறையும். கார்மேகம் மறையாது. ஊதினால் காடா விளக்கு அணையும். கதிரவன் அணையாது. பல நூற்றாண்டு ஆனாலும் தலைவர் தளபதி புகழும் மறையாது.